

புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

DUPLICATE

இந்துசாதனம்.

விரோதி ௵ (1889) ஆவணி மீ ௨௨௨ ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵ க-க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௭௫.
தொலைப்பகுதி: ,, ரூ. ௩-௭௫.
தனிப்பிரதி. சதம் -௧௦.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫௦.
,,	அரைக்கலம்	௪-௦௦.
,,	கால்கலம்	௨-௫௦.
,,	ஒரு அங்குலம்	-௫௦.

அடுத்தமுறைகட்குமேல் விகிதங்களில் அரைவாசி.

புத்தகம் - ௩௦ { யாழ்ப்பாணம்—சித்தார்த்தி௵ வைகாசி மீ ௩௦௳; ௧௯௧௯-ம் ௵ ஜூன் மீ ௧௨௳. } இலக்கம் - ௪௬

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிகா ணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிக்கை தொழிலென் றேத்து
மதம்பூத்த விநாயகன்றன் கழல்கள் போற்றுவோம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, சீமுள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, குன்மவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦ அரைஇறாத்தலுக்கு ரூபா ௧௦ கால் இறாத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
நெ. 96 முதல் மருதானை, கொழும்பு.

விசேஷ வியாபாரம்! சொந்த நெசவு!!
தந்தி விலாசம்:— முறஹரி, மதுரை.

M. R. K. S. SONS OF M. K. RAMIER,
AMMAN SANNADHI STREET,
MADURA, SOUTH INDIA.

இதனால் சகல நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது:

எங்கள் முன்னோர்களால் நடத்திவந்த ஜவுளி வியாபாரத்தைச் சுமார் 12 வருஷகாலமாக எங்கள் பிதா "மு. க. ராமையர் அண்டு சன்ஸ்" என்னும் விலாசம் வைத்து நாங்கள் அநேகம் நெசவு சாலைகள் ஏற்படுத்தி நூதனமாய் ஏராளமான திணுசுகள் உற்பத்தி செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் பிரதானமாயுள்ள ஜில்லாபிரதேசங்களிலும் இருக்கும் வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் மற்றையாவருக்கும் வியாபாரத்துக்காகவும் சொந்தப் பாவிப்புகளுக்காகவும் விசேஷமாய் ஜவுளிகள் கொடுத்து பெரிய ஜவுளிவியாபாரஞ்செய்துகொண்டிருந்தோம்.

தற்சமயம் நாங்கள் ஷை மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் மேலகோபுரவாசல் தெருவிலும், கீழ்வெளி வீதியிலும் நடத்திக்கொண்டுவந்த நெசவு ஜவுளி வியாபாரத்தை நிறுத்தி வெகுகாலமாக மேற்படி நெசவுசாலைகளில் வைத்திருந்த நெசவுகாரர்களையும் இன்னும் அநேக புது நெசவுகாரர்களையும் சேர்த்து உள்ளூரிலும் இந்தியாவிலுள்ள அநேகர்களிலும் ஏராளமாய் புது நெசவு சாலைகள் ஏற்படுத்தி தற்கால நாகரீகத்துக்கு தகுந்த மாதிரியாயும் நாளுக்கு நாள் நூதனமான புது மாதிரி திணுசுகள் உற்பத்திசெய்தும் விலைகள் மிகவும் சகாயமும் விசேஷ லாபத்தைக் கருதாமல் சுதேச நன்மையை முன்னிட்டும் வியாபாரம் விருத்திசெய்துகொண்டிருக்கிறோம்.

முக்கியமாய் நாங்கள் மேற்படி மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் விலாசத்திலிருந்து சுமார் 7 வருஷகாலமாக முக்கிய பட்டணங்களையும் பிரதானமான ஜில்லாபிரதேசங்களையும் அநேகந்தடவை நாங்கள் நேரில் போய் பார்வையிட்டு அவ்விடங்களிலிருக்கும் சுதேச சீமான்களும் சீமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் மற்றும் சாதாரணமா புஜனகர்களும் சாதாரணமாய் பாவிக்கக்கூடியதும் விசேஷ காலங்களில் பாவிக்கக்கூடிய மாதிரியான திணுசுகளும் ஒவ்வொருவூர்களிலும் அப்போதைக்கப்போது உண்டாகும் நாகரீகத்தையும் பார்வையிட்டு ஒவ்வொருவர்கள் மனதிற்கும் திருப்திகரமான திணுசுகள் அனுப்பிக்கொண்டும் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு மாதங்களில் விசேஷமாய் விற்கக்கூடிய திணுசுகள் அனுப்பிக்கொண்டும் எல்லோருடைய மனத்திற்கும் சந்தோஷமாகும்படி விசேஷவியாபாரம் செய்துகொண்டுவந்த நாங்கள் தற்சமயம் மதுரை அம்மன் சந்நிதித் தெருவில் ஜவுளிக்கடை ஏற்படுத்தி ஏராளமான திணுசுகள் வைத்துக்கொண்டு ஒவ்வொருநாளும் அயலூர்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும் மற்ற முன்போல யாவர்களுக்கும் [illegible] திணுசுகள் அந்த அந்த தேசங்களுக்கு பிடித்த மாதிரி ஜவுளி ஏராளமாய் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு தேசங்களிலிருக்கும் சீமான்களும் சீமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் கிராமியார் கண்காணிமேக்கர் கண்டக்டர்களும் அவரவர்களுக்கு சொந்தப் பாவிப்புக்கும் வேலையாட்களுக்கும் வேண்டிய மாதிரி ஜவுளிகளுக்கு எங்கள் கம்பேனிக்கு ஆர்டர் கொடுக்கவேணுமாய் நாங்கள் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறபடியால் தாங்கள் கட்டாயம் எங்கள் கம்பேனிக்கு ஆர்டர் தந்து நாங்கள் அனுப்பும் சாமான்கள் தங்கள் தங்கள் மனத்திற்கு சந்தோஷமாயிருப்பதைக்கண்டு ஒவ்வொருவரும் மேன்மேலும் எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்துகொண்டு வரவேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(முக்கிய கவனிப்பு) எங்கள் கம்பேனிக் கேட்லாக வேண்டியவர்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். சரக்குகள் தபால் பார்சலாகவும் ரயில் பார்சலாகவும் கப்பல் மார்க்கமாயும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. இல்லாத ஊர்களுக்கு (பாங்க்) மூலியமாய் அனுப்பப்படும். பாங்க் இல்லாத ஊர்களிலிருக்கிறவர்கள் பாங்க போஸ்ட் ஆர்டர் முற்பணம் அனுப்பவேண்டும், அல்லது சமீபத்தில பாங்க் இருக்கும் ஊர்களின் பெயரும் பாங்கியின் விலாசமும் தெரிவிக்க வேணும். ஒவ்வொருவரும் அனுப்பும் தபால் முதலியவைகளில் அவரவர்கள் முழுவிலாசத்தை தமிழ் அல்லது இங்கிலீஷில் தெளிவாய் எழுதி அனுப்பவேண்டும்.

சிங்கப்பூர் பினாங்கு மலாய்தொடுவாய்ப் பகுதிகளுக்கும் சிலோனுக்கும் இங்கிலீஸ் தமிழ் தெரிந்த ஏஜண்டுகள் தேவை.

தங்கள் அன்புள்ள,
மு. ரு. க. சு அண்டு கம்பேனி,
சொந்த நெசவு ஜவுளி வியாபாரிகள்,
அம்மன் சந்நிதித் தெரு,
மதுரை (தென் இந்தியா.)
Telo. Address:— "Murahari" Madura.

ஜவுளி விளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன திணுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில ஜரிகையிலும், சாதாவிலும், வேஷ்டிகள், சால்வைகள், உருமால்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச்சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சுங்கடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகை பின்னல், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஸ்மீர், காக்கிநாடா, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, நெல்லூர், உப்பாடை, துயிலி, மலையானம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பருத்திச் சேலை வகையரா சகலதிணுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லறையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தி யில்லாத சரக்குகளை திருப்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடரும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினாங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரேயிட் செட்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென் ஆபிரிக்கா மோரிஸ் முதலிய வெளி நாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியாடர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புகோம். அவ்விடம் வந்து பணம்கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். உடனே பணத்தைக் கட்டி பார்சலகளைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய நேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்
மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலக் கோபுரவீதி,
மதுரை. இந்தியா)

14

SRI RAMANA MAHARSHI.

தீனர்களை ரக்ஷிக்கும்பொருட்டுக் குருமூர்த்தமாகஎழுந்தருளி
திருஅண்ணாமலையில்பிரஹ்மானந்தஸ்வரூபராய் வீற்றிருக்கும்
பிராஹ்மண பால்ய ஸந்யாஸி என்று வழங்கும்
ஸ்ரீ. ரமண மஹர்ஷி.

இது ஒரு புது நூதனம்.

காற்றடைக்கும் தலையணை.

இதில் ஒரு குஷ்மம் உண்டு. அதிலிருக்கும் திருகாணியைக் கழற்றி, தலையணை எவ்வளவு உப்புதலும் உயரமும், வேண்டுமோ அவ்வளவுக்கு வாயால் ஊதி உடனே திருகாணியைப் போட்டுவிடவும். வெகு சொகுசாக இருக்கும். காற்றைப் போக்கிவிட்டால் ஜேபியில் மடித்து வைத்துக் கொள்ளலாம்.

நாகரீகமான வேலை விலை அணா 0-12-0.

பொன்னேரி சேலை.

பொன்னேரி ரோஸ் கெட்டி சாயப்புடவை இதுஉயர்ந்த மல்லில் போட்டது. முந்தானியில் மாங்காய் போட்டு ஓரத்தில் எழுத்துவேலை கரைகள் கட்டி வெகு அழகாயிருக்கும் புதுமோஸ்தர்.

சேலை 1-க்கு விலை ரூபா 4 8 0.

சாய வேஷ்டி.

உயர்ந்த மல்லில் கெட்டித்தரசாயம் போட்டு ஓரத்தில் சிறு கரைகள்கட்டி வெகு நேர்த்தியாகயிருக்கும்.

6½ முழம் நீளம் 3 முழம் அகலம் வேஷ்டி 1-க்கு விலை 2-4-0.

செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது.

விலாசம்:—

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்டு, மதராஸ்.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.

சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்
வண்ணார்பண்ணை.

விளம்பரம்.

அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட உத்தமமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட அஷ்டபந்தன மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றது.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

யாழ்ப்பாணம் வியாபாரச் சமுதாயம்

இச்சமுதாயத்தின் வண்ணார்பண்ணை இரண்டாம்இலக்கப் புடைவைக்கடைக்கு ஆவணி மீ 1உ தொடக்கமாக ஒரு மானேசர் தேவை. போதிய பிணை கொடுக்கவேண்டியது.

வேண்டிய விபரங்களை மேற்படி சமுதாயத்தின் தலைவரிடங் கேட்டறியலாம்.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:-சித்தார்த்தி௵ வைகாசிமீ ௩0உ

ஆடுகோழிவெட்டுதல்.

ஆடுகோழி வெட்டிப் பலியிடல் நமது சமயத்துக்கு முழுதும் மாறான ஓர் பெரும் பாவச் செய்கை என்பதைப்பற்றி நாம் பன்முறை இப்பத்திரிகையிலெழுதியிருக்கிறோம். மெஸ் பிறீமன் துரையவர்கள் இங்கு கவன்மேந்து ஏசன்றாக விருந்தபோது இக்கொடிய செயல நடைபெறும் ஆலயங்கள் சிலவற்றிற்குச் சென்று அதனை நிறுத்திவிடும்படி அவ்வாலயங்களின் மானேசர்மாருக்கு நற்புத்தி கூறினர். யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரும், இந்துவாலிப சங்கத்தாரும் சென்ற சிலவருடங்களாக இத் துர்ச்செயலை நிறுத்திவிடுவதற்குப் பெருமுயற்சி செய்தார்கள். இவர்களது உபதேசத்திற்கிணங்கி இச்செயல் நிறுத்தப்பட்டிருந்த ஆலயங்கள் சிலவற்றில் பின்னரும் இது நடைபெறத் தொடங்கியிருக்கின்றது. நாளையதினம் அராலி அம்மன் கோயிலில் ஓர் பெரும்வேள்வி நடைபெறவிருக்கின்றது. இவ்வேள்வியில் நூற்றுக்கணக்கான ஆடுகோழிகள் வெட்டி அதம்பண்ணப்படவிருக்கின்றன. வருகிற இரண்டு மூன்று மாசங்களில் எத்தனையோ ஆடுகோழிகள் உயிர்வதை செய்யப்படவிருக்கின்றன.

நமது சமயத்திலே "எவ்வுயிரு நீங்காதுறையுமிறை சிவனென் - றெவ்வுயிர்க்கு மன்பாயிரு" என்று மறைஞானசம்பந்த சிவாசாரியரும், "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்-உயிர்செகுத் துண்ணாமை நன்று" "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி-யெல்லாவுயிருந் தொழும்" "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி - தின்னுயிர் நீக்கும் வினை" என்று திருவள்ளுவநாயனாரும், "கொலையாதி யகன்றரிய ஞானந்தானே கூறரிய மேலான ஞானமாகும்" "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு மிலங்குமுயிருடலனைத்து மீசன்கோயில் - எவ்வுயிரு மெம்முயிர்போ லென்றுநோக்கி யிரங்காது கொன்றருந்து மிழிவினோரை" என்று சிவஞானதீபமுடையாரும், "கொல்லா விரதங் குவலயமெல்லாமோங்க-எல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே" என்று தாயுமானசுவாமிகளும், "இதமுயிர்க் குறுதிசெய்த லிதமற்றது செய்யாமை" என்று சிவஞானசித்தியாரும், "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் .... செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே" என்று பட்டினத்தடிகளும் சொல்லியிருக்கின்றார்கள். இங்ஙனமெல்லாம் மிகவுங் கண்டித்துக் கூறப்பட்டிருக்கும் இவ்வுயிர்வதையை நம்மூரவர் சிலர் செய்துவருவது எவ்வளவு பெரும் அறியாமை.

முற்காலத்திலே வேள்விகள் யாகங்களில் பலியிடப்படவில்லையா? அதுபோல நாமும் இக்காலத்திற் செய்தாலென்னவெனச் சிலர் சொல்லக்கூடும். வேதத்திலே பலி விதிக்கப்பட்டிருக்கிறது தான். ஆனால் இக் கலியுகத்திற் பலியிடலில்லை இதனை வேதத்துக்குச் சாயணாசாரியர்செய்த பாஷியத்திற் காணலாம். வேள்வியிற் பலியிடுகிறவர்கள் பலியிடும் உயிரை மீட்டும் எழுப்புஞ் சக்தி உடையவர்களாயிருத்தல்வேண்டும். அந்தச் சக்தியில்லாதவர்கள் அதனை ஒருபோதுஞ் செய்தலாகாது. இதுபற்றியே "புன்மையாம் பசுத்தடிந்து முறையில் வேள்வி யாற்றியே - தொன்மைபோலெழுப்புமாறு சுருதிசொற்ற வாறுபோல்" எனக் கந்தபுராணத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

இது நமது சமயத்துக்கு முழுதும் மாறான செய்கையாயிருப்பதுமன்றி பார்ப்போர் மனத்திற் பெரும் வன்கண்மையை உண்டாக்கக்கூடிய செயலாயுமிருக்கின்றது. நமதூரினர் ஆடுமாடுகளடிப்பவர்களுக்கு உத்தரவு கொடுக்கும்போது மனிதசஞ்சாரமில்லாத இரகசியமான இடத்தில் அடிக்கும்படி கட்டளையிடுகிறார்கள் ஆனால் ஆலயங்களில் வெகு சனசமூகத்தில் ஆடுகோழிகள் வெட்டப்படுகின்றன. இவ்வாடுகோழிகள் வெட்டப்பட்டு வீழ்ந்து துடிதுடித்துப் பதைபதைப்பதையும், இரத்தம் ஆறாகப் பெருகுவதையும் பார்த்துப் பழகுவோர் மனம் வன்கண்மைபெய்துவதனால் மனிதரை வெட்டவும் அவர்கள் அஞ்சமாட்டார்களன்றோ?

இங்குநாச் செயலைப் பக்தி விசுவாச மேலீட்டினாலல்ல உண்டாட்டுக் களியாட்டின் பொருட்டே பெரும்பாலுஞ் செய்து வருகின்றார்களெனச் சொல்லலாம். ஓர் ஆட்டை வளர்த்துப் பலியிடும்போது அதன் மாமிசத்தை நல்ல விலைக்கு விற்கிறார்கள்; அல்லது அதனைக் கொண்டு சென்று தாமும் தமது இனசன பந்துக்களும் புசித்துக் கொண்டாடுகிறார்கள். பலியிடப்படும் ஆடுகோழிகள் விற்கப்படல் அல்லது உண்ணப்படல் உதவாதுபோகக் கூடுமாயின் இப்பலியிடும் வழக்கம் ஒருபோதும் நிலைநிற்கமாட்டாது.

கல்வியறிவும் நாகரிகமுமற்ற முழுமக்களே இவ்வினைச்செயலைப் பெரும்பாலுஞ் செய்துவருகிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் படித்தவர்களாயும் நாகரிகமுள்ளவர்களாயும் இருக்குஞ் சைவப்பிரபுக்கள் தமது கிராமத்தில் இம்மூடச்செயலைச் செய்துவரும் மதியீனர்களுக்கு நற்புத்தி கூறி இப்பாதகச் செயலைத் தடுத்துவிடுதல் பெரும் புண்ணியமாகும்.

நீதிபோதம். அ.

சோமேசர் முதுமொழி வெண்பா.

அன்புடைமை.

தோன்று வகைகரந்துந் தோன்றலைக்
கண் டுண்ணெகிழ்ந்து, தோன்ற நின்றான்
முன்புநளனே சோமேசா—தோன்றுகின்ற
'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா
ழார்வலர், புன்கணீர் பூச றரும்.'

ப-ரை. நளன்-நளமகாராசன், முன்பு-முற்காலத்தில், தோன்றுவகைகரந்தும்-தான் இன்னானென்று பிறர் அறியாதபடி (தேர்ப்பாகனாகவும் சுயம்பாகியாகவும்) உருமாறியும், தோன்றலைக் கண்டு-தன் பிள்ளைகளைக் கண்டமாத்திரத்தே, உள் நெகிழ்ந்து-மனமுருகி, தோன்றநின்றான்-தான் யாரென்பதைப் பிறர் அறிந்துகொள்ளத் தக்கவனாய் நின்றான், சோமேசா-சோமேசரே, தோன்றுகின்ற-உண்டாகின்ற (இயல்பாகவெழுகின்ற) அன்பிற்கும்-அன்பினுக்கும், அடைக்கும்-(பிறரறியாமல்) அடைத்துவைக்கும், தாழ் உளதோ-தாழும் உண்டோ, ஆர்வலர்-(தம்மால் அன்பு வைக்கப்பட்டவருக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டவிடத்தே பொழிகின்ற) அன்புடையாரது, புன்கணீர்-புல்லிய கண்ணீரே, பூசல்தரும்-எல்லாருமறியத் தூற்றும் (எல்லாருமறியக் காட்டிவிடும்) [ஆதலால்] எ-று.

க-ரை. நளன் தன் மனைவி மக்களும் பிறரும் தன்னை யின்னனென அறியாதபடி தான் செல்ல வேண்டுமென்று மாறுவேடம்பூண்டு விதர்ப்பநாட்டிற்குச் சென்றும், அங்கே தன் மக்களைக் கண்ட மாத்திரத்தே தன்னைமறந்து கண்ணீர் சொரிந்து வருந்தினன். ஆதலால் அன்புவைக்கப் பெற்றவரது துன்பம் கண்டமாத்திரத்தே அன்புவைத்தவர் கண்ணீரே அவ்வன்பைப் பிறருக்குக் காட்டிவிடும் என்பதாம்.

வி-ரை. தாழும் என்பதிலுள்ள உம்மை எச்சம். அன்பிற்கும் என்பதற்கண் உம்மை அன்பைச் சிறப்பித்து நின்றது; காட்சியளவையால் அறியப்படாதாயினும் அனுமான அளவையால் வெளிப்படும் என்பதாம்.

முன்புநளன்தோன்றலைக்கண்டு உண்ணெகிழ்ந்த வரலாறு

நிடதநாட்டை நீதிநெறிப்படி பரிபாலித்த நளன் சனியபத்தனுழி, தன் மந்திரிமார் தடுப்பவும் கேளாது புட்கரனுடன் சூதாடி நாடு நகரிழந்து, கானகஞ் செல்லும் மார்க்கத்தில் தன் மக்களையும் பின் மனைவியையும் பிரிந்து உருமாறி இருதுபன்ன ராசனுக்குத் தேர்ச்சாரதியாகவிருந்தான். தமயந்தி ஒருவாறு விதர்ப்பநாட்டை யடைந்து அங்குத் தன் பிதாவுடன் வசித்தாள். விதர்ப்பராசன் தன் மருகனாகிய நளனை எங்கும் தேடியும் காணாமையால் ஒரு உபாயத்தை மனத்தில் நினைந்து, தன் மகளாகிய தமயந்திக்கு இரண்டாமுறை சுயம்வரமென்று இருதுபன்னனுக்குத் தெரிவிக்க, அச்சுயம்வரத்தின் பொருட்டுச்சென்ற இருதுபன்னனுடன் நளனுஞ் சாரதியாகச் சென்று விதர்ப்பராசனுடைய மாளிகையின் ஒருபுறத்தே இருந்தான். இருதுபன்னனுடைய தேர்ப்பாகன் மீது தமயந்திக்குச் சந்தேகம் பிறந்தது.

தமயந்தி, கேசினியென்னுந் தன் பாங்கியை, அரசனுடனிருப்பவன் தன்னுயிர்க்குயிரோ வென அறிந்துவரும்படி யனுப்ப அவள் சாரதியிடஞ்சென்று "நீ யார்? உனக்கென்ன தொழில் தெரியும்? நீ இங்கே வந்த காரணமென்ன?" என்று வினவினள். வாகுவன் "நான் இருதுபன்ன மகாராசாவின் தேர்ப்பாகன், தீயும் நீருமின்றிச் சமையல் செய்ய வல்லேன், என் பெயர் வாகுவன்" என்றான். அதற்குக் கேசினி 'தீயும் நீருமின்றிச் சமையல் செய்யும் வித்தையை நளமகாராசனன்றிப் பிறரறியார். ஆதலால் நீ அவரிடம் இதனைக் கேட்டனையோ? அவர் இப்பொழுது எங்கேயிருக்கின்றார்சொல்லு" என்று கூறினள். வாகுவன் "நான் இவற்றை நளனிடம் கற்கவில்லை, நளனிருக்குமிடமு மறியேன்; அதன்றி, கற்புள்ள ஒரு பெண் தனது நாயகனைப் பிரிந்தால் வேறு மணமுடித்துக்கொள்ளல் முறையோ?" என்றான். வாகுவன் இப்படி வினவலும், கேசினியென்னுந் தோழி சந்தேகமுற்றவளாய் விரைவில் மீண்டு தமயந்தியிடஞ் சென்று தேர்ப்பாகன் கூறியவையனைத்துஞ் சொல்லிப் பின்னருமவளை நோக்கி 'நங்கையே, உருவத்திலன்றிப் பேச்சில் அச்சாரதிக்கும் எங்களரசனுக்கும் யாதும் பேதமில்லை" என்றுஞ் சொல்லினள். தமயந்தி இன்னமும் அப்பாகனைச் சோதனை செய்ய நினைந்து தன் பாங்கியிடம் அரிசி முதலிய சமையலுக்காகிய பொருட்களைக் கொடுத்து அவற்றை அச்சாரதியைக்கொண்டு சமைப்பித்து வரும்படி அவளை யனுப்பினள். அவளும் அவற்றை வாங்கிச் சென்று சாரதியிடங் கொடுக்க, அவன் நெருப்பும் நீருமின்றிச் சமையல் செய்து கொடுத்தான். கொடுத்தவற்றைப் பெற்றுவந்து கேசினி தமயந்திக்குக் காட்ட அவள் "இவர் என் பத்தாவன்றிப் பிறிதொருவரல்லர்" என்று சிந்தித்து மனங்குழைந்து தன் மக்களை யனுப்ப, மக்களுஞ் சாரதியிடஞ் சென்றார்கள். சென்ற மக்களை நளன் கண்டமாத்திரத்தே தழலிடைப்பட்ட மெழுகென உள்ளமுருகிக் கண்ணீர் சொரிந்தான். வாகுவனென்னும் மறுநாமத்துடன் தேர்ச்சாரதியென நடித்துக்கொண்டு தான் அங்கே போயிருந்ததனை முற்றாய் மறந்துவிட்டான். பிள்ளைப்பாசம் அவனுள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அவன் அவர்களை நோக்கி, "மக்காள், உங்களைப் பார்க்கும்போது என் பிள்ளைகள்போற் காணப்படுகின்றீர்கள், நீங்கள் ஆருடைய பிள்ளைகள், சொல்லுங்கள்" என்று மனமுருக, கண்ணீர்வார, நெட்டுயிர்த்துக் கேட்டான். அதற்கு அப்பிள்ளைகள் "சுபம்பாகியே, நாங்கள், நிடதநாட்டையாண்ட நளமகாராசனுடைய பிள்ளைகள்; எம்பிதா எம்மன்னையைக் கானகத்திலே காரிருளிலே தன்னந்தனியே கைவிட்டுப் போயினர். நாங்கள் எங்கள் தாயுடன் இங்கே வாழ்கின்றோம்; எங்கள்நாட்டையும் வேற்றரசன் கைப்பற்றிக்கொண்டான்" என்று அழுதழுது சொன்னார்கள். தம்பிள்ளைகள் கூறிய வார்த்தையைக் கேட்ட நளன் முன்னரிலும் அதிக துன்பமெய்தி அவர்களை நோக்கி 'வேற்றரசன் உங்கள் நாட்டை அபகரித்துக்கொள்ள உங்கள் பிதா அவனை வெல்லமுடியாமையாலா காட்டிற்கு ஓடினர்" என்றுகேட்டான். பிள்ளைகள்சினமுற்று நளனைநோக்கி "எ மடையா, அரசர்பெருமையை அறியாமையினால் இப்படிச் சொன்னாய், எங்கள் பிதா சத்தியந் தவறாதவர்; சத்தியத்தைக் காக்கும் பொருட்டே நாட்டைவிட்டகன்றார்; வலிமையில்லாமையாலன்று" என்றனர். நளனும் "ஆம், மன்னர்பெருமையை என்போன்ற மடையர் அறிய வல்லரோ" என்றான். (மடையர்-சமையல் செய்வோர்.

நளன் தன் மக்களைக் கண்டு மனம் நெகிழ்ந்தானென்பதை "மக்களை முன்காணா மனநெகிழ் வெய்தியிராப், புக்கெடுத்து வீரப் புயத்தணையா-மக்காள்நீர், என்மக்கள் போல்கின்றீர் யார்மக்களென்றுரைத்தான், வன்மக்களியானை மன்" என்பது முதலாக வரும் (நளவெண்பா - கலிநீங்கு காண்டம் [illegible]) செய்யுட்களானறிக.

சமாசாரம்.

மகா சங்காபிஷேகம்:—ஸ்ரீமத். அமிர்தானந்த சுவாமிகளின் முயற்சியால் பருத்தித்துறைசப் கொலெக்டர் ஸ்ரீ. ச. திருச்சிற்றம்பலமவர்களது உபயமாய் வருகிற ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை சித்திவிநாயகராலயத்தில் மகா சங்காபிஷேகமும் அன்னதானமும் விதிப்படி சிறப்புற நிகழும்.

சேனைச்செய்கை:—வடமேல் மாகாணத்தில் 260 ஏக்கர் நிலம் சேனைசசெய்கைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றதென்றும் இதைவேண்டுவோர்கள் கவன்மேந்து ஏசன்றிடமிருந்து உத்தரவுபெற்று இனாமாய்ச் செய்கைபண்ணலாமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் லோக்கல்போட்:—யாழ்ப்பாணம் லோக்கல்போட் கணக்குச் சோதிக்கப்பட்டபோது ஏதோபிசகு காணப்பட்டமையால், டைபோட் செக்கிறிற்றெறி வேலையினின்றும் நிறுத்தப்பட்டிருக்கிறார். யாழ்ப்பாணம் மதுபரிபாலன ஆபீசிலும் ஏதோ பிசகு காணப்பட்டிருக்கின்றதாம்.

உபாத்தியாயர்களுக்கு விருந்து:—யாழ்ப்பாணத்திற் கூடிய உபாத்தியாயர்களின் சங்கத்துக்குச் சமூகமளித்த தமிழ் உபாத்தியாயர்களுக்கு சென்ற 2உ திங்கட்கிழமை சாயந்தரம் ஸ்ரீ. K. V. மார்க்கண்டுஅவர்களும், அடுத்தநாள் சாயந்தரம் யாழ்ப்பாணம் மணியகாரன் ஸ்ரீ V. M. முத்துக்குமாருஅவர்களும் விருந்தளித்தனர்.

அரிசிநிலைமை:—ஸ்ரீமான் பொ. இராமநாதனவர்கள் தேசாதிபதியவர்களைத் தாம சந்தித்து அரிசிக்குறைவால் ஏழைசனங்கள்படும் கஷ்டத்தைப்பற்றிப் பேசியபோது தேசாதிபதியவர்கள் அதிக அனுதாபமடைந்து உடனே இந்திய பிரதிநிதியவர்களுக்குத் தந்தி யனுப்பினரென்றும், இக்குறைவு சிறிது நாட்களுக்கு மேலிருக்கமாட்டாதென்றும் இரண்டொரு நாட்களில் தூத்துக்குடி முதலியவிடங்களிலிருந்து கப்பல் மார்க்கமாகவும் புகைரத மார்க்கமாகவும் அரிசி கொண்டுவரப்படுமென்றும், 20உ றங்கூனிலிருந்து அதிக அரிசி இறக்குமதியாகுமென்றும் தேசாதிபதியவர்கள் தமக்குச் சொல்லினரென்றும் தெரிவித்திருக்கின்றனர்.

ஓர் இந்திய நீதிபதியின் வரவு:—சென்னை ஹைகோட்டு நீதிபதிகளிலொருவராகிய கௌரவ திவான்பகதூர் T. சதாசிவஐயரவர்கள் சுகத்தின்பொருட்டு இலங்கைக்குவந்து சில இடங்களில் தங்கியபின் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்தனர். இவர்யாழ்ப்பாணம் புகைரதஸ்தானத்திலிறங்கியபோது பல பிரபுக்கள் சென்றழைத்து அவரை யுபசரித்தனர்.

நமது பழைய கோலோனியல் செக்கிறிற்றறியவர்களுக்கு சேர் பட்டமளிக்கப்பட்டது:--நமது பழைய கொலோனியல் செக்கிறிற்றறி மெஸ். ஸ்டப்ஸ்அவர்களுக்கு சேர் பட்டமளிக்கப்பட்டிருக்கின்றது. இவர் முதன் முதல் இலங்கையிலே கொலோனியல் ஆபீசில் ஓர் கிளாக்காக நியமனம்பெற்று விரைவில் உத்தியோக உயர்வுபெற்று ஹொங்கொங் தேசாதிபதியாகி இப்போது சேர் பட்டமளிக்கப்பெற்றிருக்கின்றனர்.

விவாகம்:—வண்ணார்பண்ணை பிரசித்த நொத்தாரிஸ் ஸ்ரீ. ச. சிவப்பிரகாசமவர்களின் சிரேஷ்டபுத்திரன் ஸ்ரீ. நாகலிங்கமவர்களுக்கும் கைதடி ஸ்ரீ நமசிவாயமவர்களின் புத்திரிக்கும் சென்ற செவ்வாய்க்கிழமை யிரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் சிறப்பாய் நடைபெற்றது. தம்பதிகளிருவரும் சுகவாழ்வெய்தி நீடூழிவாழச் சிவபிரான் திருவருள் புரிவாராக.

—அரசாட்சியாரின் கீழ் "டிஸ்பென்சர்" உத்தியோகத்திலமர்ந்திருந்து அதினின்றும் நீங்கி இப்போது வியாபாரம் நடத்திவரும் கலட்டி ஸ்ரீ. சரவணமுத்து அவர்களின் புத்திரிக்கும் இலங்கை நீர்ப்பாய்ச்சற் பகுதியில் ஓர் இஞ்சினீராக இருக்கும் ஸ்ரீ செல்லத்துரைக்கும் சென்ற செவ்வாய்க்கிழமையிரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. மணமகனும் மணமகளும் சகல சம்பத்துக்களும் பெற்று இனிது வாழச் சிவபிரான் திருவருள் புரிவாராக.

வடமேன்மாகாணத்திலிருந்து நெல் அரிசி ஏற்றுமதி செய்தல் தடுக்கப்பட்டது:—வடமேன்மாகாணத்திலிருந்து கடல்மார்க்கமாயாவது புகைரதமார்க்கமாயாவது உத்தரவின்றி வேறிடங்களுக்கு அரிசி நெல் ஏற்றுமதி செய்யக்கூடாதென்று அரசாட்சியார் விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

முல்லைத்தீவுக் கச்சேரிகோடுகளின் இடமாற்றம்:—முல்லைத்தீவுக்கச்சேரி கோடுகளை நெடுங்கேணிக்கு மாற்றலாமோ வென்பதைக் குறித்து ஆலோசிப்பதற்கு வடமாகாண ஏசன்றரவர்களும், முல்லைத்தீவு உதவி ஏசன்றரவர்களும், புறோவின்சல இஞ்சினீயர்களும், சேர்வயர் மெஸ். டிறீக்ஸ் அவர்களும், முல்லைத்தீவு அரசாட்சி வைத்தியரும் ஓர் கமிற்றியாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஓர் புதிய தொழில் முயற்சி:—தேங்காயிலிருந்து வெண்ணெய் முதலியன செய்யவும், கொப்பறாவிலிருந்து எண்ணெய், தகரப்பால், விஸ்கோத்து முதலியன செய்யவும் புதிதாய்க் கொழும்பிலே ஓர் கொம்பனி ஏற்பட்டிருக்கின்றது. ஐரோப்பியர் இலங்கையர் இந்தியர் இந்தக் கொம்பனியிலே சேர்ந்திருக்கின்றனர். இலங்கையிற் சர்க்காரத் தொழிற் தலைவராயிருக்கும் மெஸ். ஐதேவரம் எனபவரே இத்தொழிற்குத் தலைவராயேற்பட்டிருக்கின்றனராம்.

தையலார் மையலிற்பட்டார் தமக்கோர் மதியுண்டாமோ:--சிலநாட்களின்முன் கொழும்பில் ஒருவியாபார சமுதாயத்தில் உத்தியோகத்திலிருந்த ஒரு வாலிபன் தான் காதல்கொண்ட கன்னிகைக்கு விவாகச் செலவிற்காக 1000 ரூபாவைக் கொண்டுபோய்க் கொடுத்தான். அதைப்பெற்ற அக்கன்னிகையும் மிகமகிழ்ந்து தன காதலன் செயலைத் தாயிடஞ் சென்று தெரிவித்தாள். ஆனால் தாய் மருமகனை மெச்சுவதைவிட்டு அவன்மீது சந்தேகங்கொண்டு அப்பணத்தையும் மகளிடம் வாங்கிக்கொண்டு மருமகனது உத்தியோக சாலைக்குச் சென்று அதன் அதிபரை விசாரித்தபோது அவர் காசு 1000 ரூபாவைக் காணவில்லை என்றார். மாமி மருமகன் செயலைக் கூறிப் பணத்தைக் கொடுத்தபோது அதிபர் அந்தப் பெண்ணின் குணத்தை மெச்சி, பணத்தை அவளுக்கே உபகாரமாகக் கொடுத்து "அம்மா, உமதுயோக்கியத்தை மெச்சுகின்றேன், உன் மருமகனோ பெரிய கள்ளன், உமது முகத்திற்காக அவன்மீது வியாச்சியந் தொடுக்காது விடுகின்றேன்" என்றாராம். அவ்வாலிபன் அடாத செய்கையால் தன் உத்தியோகத்தையும் மரியாதையையும் அருமைக்காதலியையு மிழந்தான்.

ஓர்பரம்பரை லார்ட்பட்டவர்த்தனர்:-லார்ட் கிச்னர் அவர்கள் தமக்குப்பின் தமது சந்ததியாருள் தமது பட்டத்திற்கு உரியவர்களாக வருபவர்கள் இங்கிலாந்தில் வசிப்பதற்கு வேண்டிய செலவிற்காக ஒருலக்ஷம் பவுண் கட்டியிருக்கிறார்.

ருஷியசக்கிரவர்த்தி உயிரோடிருக்கின்றாராம்:-ருஷியசக்கிரவர்த்தியும் அவரதுகுடும்பத்தாரும் உயிரோடிருக்கிறார்களெனத் தமக்கு இருவிடங்களிலிருந்து செய்திவந்திருக்கிறதாக பம்பாயிலிருந்து ஓர் நிருபர் "டெயிலிகுறோனிக்கல்" என்னும் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றனர்.

இந்தியாவும் மதுபானவிலக்கும்:--கூனூரில் சென்னை பிஷப்அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் கூடிய தென்னிந்திய பாதிரிமார் சங்கத்தில் இந்தியாவில் குடிவெறியதிகப்பட்டுப் பெருங்கேடுண்டாகின்றமையால் இந்தியாவிலே மதுபானவிலக்கு விஷயமாக உழைக்கும் இந்தியமகமதிய சீர்திருத்தக்காரருடன் சேர்ந்து மதுபானத்தை இந்தியாவிலிருந்து முழுதும் நீக்கிவிட முயற்சிசெய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வங்காள கவிவாணராகிய சார் ரபீந்திரநாத தக்கூரவர்கள்:—ஆங்கில பாஷையிற் கவிபாடுவதில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இக்காலத்தில் ஒருவருமில்லாதவராகிய இக்கவிவாணர் தமக்கு அரசாங்கத்தாரால் முன் அளிக்கப்பெற்ற சேர்ப்பட்டத்தை வேண்டாமென்று நிராகரித்துவிட்டனர். பஞ்சாபத்தில் சில வாரங்கட்கு முன்னர் நிகழ்ந்த அமைதியீனத்தை அடக்குவதற்கு இந்திய ராசாங்கத்தார் அனுசரித்த முறை மிக நீதியற்றதென்பதினாலேயே இவர் இப்பட்டத்தை வேண்டாமென்றனராம்.

ஓர் அமெரிக்க ஆகாயகமனி அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்தது:—ஓர் அமெரிக்க ஆகாயகமனி 'திறிப்பசி' குடாவிலிருந்து மேமீ 16உ தமது ஆகாயவிமானத்திலேறி சில மணித்தியாலங்களுள் "அசோர்ஸ்" என்னுமிடத்தைத் தாண்டி 17உ "ஹோர்ரு" வென்னுமிடத்திலிறங்கி அங்கிருந்து மேமீ 27உ பின்பு பறக்கத் தொடங்கி லிஸ்பன் என்னுமிடத்திலிறங்கினார். இச் சடத்தூரம் 2250 மைல். அமெரிக்காவிலே கனடா அல்லது நியுவுண்ட்லண்டிலிருந்து பறக்கத்தொடங்கி 72 மணித்தியாலங்களில் தண்ணீரிலன்றி தரையிலிறங்காது இங்கிலாந்து அல்லது ஐயர்லாந்திலிறங்குபவருக்கு பதினாயிரம் பவுன் இனாமளிப்பதற்கு ஒழுங்குபண்ணப்பட்டிருக்கிறது. இவ் வெகுமதியை இன்னுமொருவரும் பெற்றுக்கொள்ளவில்லை. மேற்குறித்த ஆகாயகமனி அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்தனராயினும் மேற்சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை.

மலாய தேசத்தாரும் யுத்தமும்:—இங்கிலாந்தில் தற்போது வசிக்கும் மலாய தேசத்தார், யுத்தத்திற்கு மலாய தேசத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் "மலாய" என்னுங் கப்பலில் உத்தியோகஸ்தர்களாயிருப்பவர்களுக்கும் அல்பேட் இளவரசருக்கும் விருந்தளித்தபோது, அல்பேட் இளவரசர் அக் கப்பலில் தாம் சேவித்தகாலத்தைத் தாமொருபோதும் மறக்கமாட்டாரென்றும், பிறிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஐக்கியப் பெலன் உலகத்துக்கு யுத்தமூலமாக இனிது புலப்படுத்தப் பட்டிருக்கின்றதென்றும் உலகத்தின் ஒவ்வொரு பகுதியிலுமிருந்து பிறிட்டிஷ் அரசுக்கு யுத்தகாலத்தில் தருண உதவி செய்யப்பட்டிருக்கின்றதென்றும், மலாய தேசத்தாரே தங்கள் இராசபக்தி விசுவாசத்தையும் ஔதாரிய குணத்தையும் முதன் முதற் காட்டியிருக்கின்றார்களென்றும், அக் யுத்தக்கப்பலை அவர்கள் யுத்தத்திற்குக் கொடுத்துதவியது யாவருமறிந்த விஷயமென்றும், இதையன்றி அவர்கள் 36 ஆகாய விமானங்களையும் நோயாளிகளின் உபயோகத்தின்பொருட்டு இருநூற்றுக்கு மேற்பட்ட படுக்கைகளையு மிவர்களுக் குதவியிருக்கின்றார்களென்றும், மேலும் யுத்தத்திற் சேர்வதற்கு அநேகரை அனுப்பினார்களென்றும், இவர்களுள் 263 பேர் இறந்துபோக 100 பேருக்குமேல் விருதுகள் பெற்றிருக்கின்றார்களென்றும் சொல்லினர்.

"செய்தார்க்குச் செய்வார் செத்தபின்பா":-(கல்கத்தாவிற் பிரசுரமாகும் அமிர்தபசார்ப் பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது.) வட இந்தியாவிலுள்ள ஒரு புகைரதப் பாதையில் பிலகாட்களின் முன் ஓர் ஐரோப்பிய பிரபுவும் ஓர் இந்திய நீதிபதியும் முதலவகுப்பு வண்டியொன்றில் ஒருங்கு பிரயாணஞ் செய்தனர். இந்திய நீதிபதி சத்தமிடும் இயல்புள்ள செருப்பை யணிந்திருந்தார். அச்செருப்பிடுஞ் சத்தம் துரைக்குப் பிடிக்கவில்லை. நீதிபதி மார்க்கத்திலுள்ள காட்சிகளை நோக்கிக் கொண்டிருக்குஞ் சமயம் பார்த்து, துரை செருப்பிரண்டையும் மெல்ல எடுத்து வண்டிக்கு வெளியே வீசிவிட்டார். நீதிபதி இதைச் சற்றுங் காணாதவர் போல மௌனமாயிருந்தார். பின்னர் ஐரோப்பியபிரபு பாராமுகமாயிருக்குஞ் சமயம் பார்த்து நீதிபதி, துரை கழற்றித் தொங்க மாட்டியிருந்த புதுச்சட்டையை அவரது கெடிகாரம் முதலிய பொருட்களுடன் மெல்லவெடுத்து வெளியே வீசிவிட்டார் சற்றுச் செல்ல துரை சட்டையைப் பார்த்தவிடத்துக்காணாமையால் நீதிபதியை "எங்கே சட்டையுங் கெடிகாரமும்" என்று கேட்டார். நீதிபதி "உமது சட்டையுங் கெடிகாரமும் நம்முடைய செருப்பைக் கூட்டிக்கொண்டு வருவதற்காகப் போயின" என்று ஆறுதலாகப் பதில் சொன்னார். துரை பதிலொன்றும் பகரவில்லையாம்.

* * *

தந்திச் சமாச்சாரம்.

(சிலோன் "அப்சேவர்' பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றன.)

சமாதான விஷயம்.

ஜர்மனிய பிரதிநிதியாகிய கவுன்றன் ஸியோ தாமெழுதிய சமாதான பிரதி நிபந்தனைகளின் முதற்பாகத்தைப் பிராஞ்சியமந்திரியாகிய கிளெமென்ஸியோவசம் கொடுத்தனர். 88 பக்கங்கள் கொண்டது. இரண்டாம்பாகமும் பின்னர்க் கொடுக்கப்பட்டது. அவுஸ்திரிய பிரதி நிபந்தனைகள் இனிமேற் கொடுக்கப்படும்.

ஜர்மனிய பிரதிநிபந்தனைகளுட் சிலவருமாறு:-

அங்கிலபிராஞ்சிய தத்துவராசாங்கத்தார் விதித்த நிபந்தனைகள் ஒத்துக்கொள்ளத்தக்கனவல்ல. பிறசிடன் வில்சனுடைய 14 நிபந்தனைகளில் ஒன்றும் அவற்றின்கட் காட்டப்படவில்லை. யுத்தநஷ்டத்தில் ஒரு பெரும் பாகத்தை ஜர்மனியர் 1926-ம் ஆண்டிற் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றனர். மற்றப் பாகத்தை வருடந்தோறும் பாகம்பாகமாகக் கொடுப்பர். ஆனால் வட்டியில்லை. தொகையும் 500,00,00,000 தங்கப்பவுண்களுக்கு மேற்படக்கூடாது. ஜர்மனிய சைநியத்தைக் குறைத்து ஒருலக்ஷம் வீரர்களாக்கிக்கொள்ளலாம். ஜர்மனியருடைய வியாபாரக் கப்பல்களிற் சிலவற்றை அங்கிலபிராஞ்சியர் முதலானோர் திருப்பிக் கொடுப்பரேல், யுத்தக் கப்பல்கள் முழுவதும் ஆயுதங்களகற்றப்பட்டு வழக்கமான கப்பல்கள் போலாக்கப்படும். விஸ்துலா நதியின் சுதந்திரத்தை நீக்கி ஜர்மனியர் அதனைப் பொதுவாக்கிக்கொள்ளுவர். போலண்ட்சனங்களும் அதனைப் பேதமின்றி உபயோகிக்கலாம். அப்பர்சிலிஸியா, கிழ்ப்புறஷியா, மேற்புறஷியா, மிமெல் என்னுமிடங்களை ஜர்மனியர் கைவிட்டுக்கொடுக்கமாட்டார்கள். டான்ஸிக் என்னுமிடத்திலுள்ள துறைமுகம் எல்லார்க்கும் பொதுவாக இருக்கவேண்டும். குடியேற்றநாடுகள் விஷயமாகச் சொல்லுமிடத்து ஜர்மனியரும் சர்வசாதிசங்கத்திற் சேர்க்கப்படவேண்டும். அச் சங்கத்தார் விதித்தபடி ஜர்மனியரே குடியேற்ற நாடுகளைப் பரிபாலிக்கல் வேண்டும். யுத்தத்தில் நிகழ்ந்த குற்றங்களின்பொருட்டு ஒருவரையுந் தண்டிக்க முடியாது. தம்மை வியாபாரஞ் செய்யவிடாது கடல்களைத் தடுத்தமைக்கு நஷ்டஈடாக ஜர்மனியருக்கு ஆங்கில பிராஞ்சியர் முதலிய தத்துவராசாங்கத்தினர் 12 850000,000 மார்க்கஸ் என்னும் நாணயங்கொண்ட பணங் கொடுக்கவேண்டும். ஆங்கில பிராஞ்சியர் முதலானோர் தங்கள் கடற்படைதரைப்படைகளைக் குறைக்கவேண்டும்.

ஜர்மனிய சனசமூகப்பகுதி மந்திரியாகிய டேவிட் என்பவர், ஐக்கிய தத்துவராசாங்கத்தார் தம்மீது விதித்த நிபந்தனைகள் அங்கீகரிக்கத்தக்கனவல்லவென்று கவுன்றன்ஸியோ கூறியது முற்றுஞ்சரியென்கின்றனர்.

தங்கள் நாட்டிற்கு மரணத்தீர்ப்புப் போன்ற நிபந்தனைகட்கு ஒருபோதும் உண்மையான எந்த ஜர்மனுவது கைச்சாத்திடமாட்டானென்று கவுன்றபேர்ன்ஸ்றப் என்பவர் சொல்லினராம். அங்கில பிராஞ்சியர்முதலானோர் விதித்த சமாதான நிபந்தனைகட்குத் தாமொருபோதுங் கைச்சாத்திடமாட்டேனென்பதை ஜர்மனியசனங்களுக்கு நன்றாய் வற்புறுத்திச் சொல்லும்படி கவுன்றன்ஸியோ சில ஜர்மனிய ராசாதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கின்றனராம்.

நிகழும் ஜூன்மீ 30உக்கு முன்னர் சமாதான நிபந்தனைகள் கைச்சாத்திடப்படமாட்டாவெனச் சொல்லப்படுகின்றது.

ஜர்மனிய பிரதிநிபந்தனைகளுட் பின்னருஞ் சில வருமாறு:—ஜர்மனியருக்குரிய குடியேற்ற நாடுகளைத் தரும்படி ஐக்கிய தத்துவ ராசாங்கத்தார் கேட்பது முழுத்தப்பு; பிறசிடன் வில்சனுடைய 14-நிபந்தனைகளுள் 5-ம் நிபந்தனைக்கு அக்கேள்வி மாறு. வியாபாரக் கப்பல்கள் முழுவதையுந் தரும்படி கேட்பது அங்கீகரிக்கத் தக்கதல்ல. கெய்சராவது யுத்தக்காரணமாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வேறுயாராயினுஞ் சரி அந்நியர்கையில் விளக்கும் வண்ணங் கொடுக்கப்படமாட்டார்கள்.

அமரிக்காவில் உண்ணாட்டுக் கலகம் நிகழ்கின்றது.

அவ்கானிஸ்தான் விஷயம்.

யுத்தத்தை நிறுத்தும்படி, சென்றமீ 27உ அவ்கான் அமீர் இந்தியபிரதிநிதிகாவலருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதனுடன் அமீர் தமது சேனாபதிகட்கு எழுதிய கடிதப் பிரதியொன்று சேர்க்கப்பட்டுள்ளது; அதன்மொழிபெயர்ப்பு வருமாறு:—"மகிமை தங்கிய நமது சகோதரர் டொஸ்ற்மகமட்கான் அறியவேண்டியது, சிறுமையான விளக்கக் காரணமாக நமது சைநியங்கட்கும் ஆங்கில சைநியங்கட்கு மிடையே போர் மூண்டுவிட்ட தென்பது இப்பொழுது தெரியக்கிடக்கின்றது; எமது பழைய நண்பர்களாகிய ஆங்கிலருடன் யுத்தஞ் செய்வது எமக்குச் சம்மதமில்லை யாதலால் யுத்தத்தை இப்பொழுதே நிறுத்திவிட வேண்டும். மற்றும் விஷயங்களை அவர்களுடன் பேசித் தீர்த்துக் கொள்ளுவோம், அவர்களுஞ் சமாதானத்தை விரும்புகின்றனர். ஆனல் நீர் தற்காப்புக்கு ஆயத்தமாகவே யிருத்தல்வேண்டும் சமாதான முடிவைப் பின்னர்த் தெரிவிப்போம். தொகுத்துச் சொல்லுமிடத்து எமது கட்டளை வருமளவுக்கும் நீர் யுத்தத்தை நிறுத்தல் வேண்டும். மேமீ27-1919 அமீர் அமனுல்லா."

அவ்கான் அமீர் யுத்தத்தை நிறுத்தும்படி இந்திய பிரதிகாவலரைக் கேட்டபோது அவர் அமீரைக்கடிந்து பின்னர் விதித்த யுத்த நிறுத்த நிபந்தனைகள்.

1. அமீர் தமது சைநியங்களை உடனே யுத்தகளத்தினின்றுந் திருப்பிக் கூப்பிடல்வேண்டும். ஆங்கில சைநியம் நிற்குமிடத்திற்கு 20-மைல் தூரத்துக் கப்பாலேயே அவ்கான் சைநியம் நிற்றல்வேண்டும்.

2 ஆங்கிலசைநியம் அவ்கான் நாட்டில் இப்பொழுது நிற்குமிடங்களிலே, தேவையெனக் கண்டால் யுத்தஞ் செய்வதற்கு ஆயத்தமாக நிற்றல்வேண்டும். ஆனல் யுத்த நிபந்தனைகள் முடிவுகண்டல்லாமல் ஆங்கில சைநியம் யுத்தஞ் செய்யாது.

3. ஆங்கில ஆகாயகமனிகள் அவ்கானிய சனங்கள்மீது. யுத்தநிறுத்தம் இருக்கும்வரைக்கும் வெடிகுண்டுபோடுந் தொழிலைச் செய்ய மாட்டார்கள், ஆனல் அவர்கள் மேலே எங்காயினுஞ் சஞ்சரித்தற்கு அதிகாரங்கொடுக்கவேண்டும். அவர்களுடைய பாதுகாப்பிற்கு மாறு எந்தக் காரியத்தையும் அவ்கானியர் செய்யவொண்ணாது. காத்திராப்பிரகாரம் அவ்கான் எல்லைக்குள் இறங்கிய எந்த ஆகாயகமனிக்கும் யாதும் தீங்கின்றிப் பாதுகாப்பது அமீர் கடனாகும்.

4 அமீர் தாமதமின்றி, அவ்கான்நாட்டு எல்லையினின்று கலகஞ் செய்யுஞ் சனங்களுக்கு இனிமேல் அப்படிச் செய்யக்கூடாதெனத் தடுக்கும்பொருட்டுத் தூதனுப்பல் வேண்டும். அப்படி அவர்கள் செய்யினும் அமீர் அதை அவர்கள் பொறுப்பிற் செய்கதென மதித்து அவர்கட்கு ஒதுக்கிடமாவது வேறு எவ்வகைச் சகாயமாவது உதவக் கூடாது.

பிரதிகாவலரவர்கள் இவைகள் மிகவுஞ் சுலபமான நிபந்தனைகளென்பதை அமீருக்குக் காட்டி இவைகளைச் சிநேகபாவமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் இவைகளை அமீர் ஏற்றுக்கைச் சாத்திட்டபின் தாம் நியமிக்கும் பிரதிநிதிகளுடனும் அமீர் அனுப்பும் பிரதிநிதிகளுடனும் கலந்து சமாதான நிபந்தனைகளை யோசித்து நிச்சயித்து, இருபகுதி அரசினரும் தொன்மைபோல் நட்பு பூண்டொழுகல் வேண்டுமென்றும், இவைகட்கு அமீர் உடன்படாவிடில் அதன் பலாபலனை அமீரே அனுபவித் தறியவேண்டி நேரிடுமென்றுந் தெரிவித்திலர்.

இந்திய பிரதிகாவலரின் நிருபம் அமீரிடம் கொடுக்கப்பட்டது.

காந்தாரத்தில் நின்ற அவ்கான் சைநியத்தின் ஒரு பாகம் திருப்பிக் கூப்பிடப் பட்டதென வதந்தியுண்டு,

கடிதம்.

பிரபஞ்சவிசாரம்.

பிரபஞ்ச உற்பத்தியைக் குறித்துப் பற்பல கொள்கைகள் பூர்வகாலந்தொட்டு உள்ளன. இக்கொள்கைகள் கடவுளுண்மையை அனுசரித்தும், மறுத்தும், சங்கித்தும் பலவாறு நடைபெறுவன. பூர்வக்கொள்கைகளுட் பிரசித்திபெற்றன: சார்வாகம், சாங்கியம், மீமாஞ்சம், ஏகான்மவாதம், பௌத்தம் முதலியனவாம். நவீனக்கொள்கைகளுட் பிரசித்திபெற்றன: பௌதிகவாதமாகிய பிராகிருதம், பரமாணுவாதம், பரிணாமவாதம், சிதாபாசவாதம், சூனியவாதம், பிரயோசனவாதம், சந்தேகவாதம், கிறிஸ்தவவாதம் முதலியனவாம். இந்த நவீனவாதங்களுள்ளே பௌதிகவாதம், பரமாணுவாதம், சிதாபாசவாதம், பிரயோசனவாதம் முதலியனதாமும் உலோகாயதம், வைசேடிகம், ஏகான்மவாதம், மீமாஞ்சம் முதலிய பூர்வக்கொள்கைகளின் அமிசங்களென்றே கொள்ளத்தக்கன. இவற்றுள் ஒன்றேனும் நியாயமுகத்து நிற்கு மாற்றலுடையதன்றென்பதனையும், சைவசித்தாந்தம் ஒன்றுமாத்திரமே எவ்வகைத்தாய ஆக்ஷேபத்தார்க்குந் தக்க சமாதானஞ்சொல்லி உண்மையைக் கடைபோக நிறுத்தவல்லதென்பதையும் தருக்கமுறைப்படி தெளிவுற விளக்கி ஸ்ரீமாந். ச. சபாரத்தினமுதலியார் அவர்கள் இயற்றிய 'பிரபஞ்சவிசாரம்'' என்னும் நூல் தமிழுலகத்துக்குப் பெரும் பயனுடைத்தாம் என்பது அதனை வாசித்தோர் அனைவரும் அறிந்திட்டுறுதிசாதிக்கத்தக்கது.

இந்நூலின்கண்ணே கிறிஸ்தவ வாதிகள் போதிக்குஞ் சூனியோபாதானசிருஷ்டி, தீமையின் உற்பத்தி, சிருட்டிபேத காரணம் முதலிய தலையுடைக்கொள்கைகளை ஆசிரியர் திட்பநுட்பமுறக் கண்டித்திருத்தலைக் கண்ட கத்தோலிக்க குருவாகிய பெஸ் ஞானப்பிரகாசர் என்பார் அவற்றுக்குச் சமாதானஞ் சொல்லுவார்போல் தமது "பாதுகாவலன்" பத்திரிகையில் வெளிப்பட்டு நீண்ட வியாசங்கள் எழுதுவாராயினர். இவர் சொல்லும் சமாதானங்கள் சிறிதேனும் ஏற்புடையனவாகா என்பதை எடுத்துக் காட்டுவது இவர்க்கும் இவர்போல்வார் பிறர்க்கும் பெரும் பயனுடைத்தாமாதலால், அந்தச் சமாதானங்களின் ஒவ்வாமையை இங்கே எடுத்துக் காட்டுவோம்.

சூனியோபாதான சிருஷ்டி.

கடவுள் பிரபஞ்சத்தைச் சூனியோபாதானமாகச் சிருட்டித்தார் என்பது, அவர் இன்மையை உண்மையாக்கியவாறாம் என்று நூலாசிரியர் பல நியாயங்கொண்டு தாபிக்க, அதனைக்கண்ட பிரகாசர் தமது கடவுள் பிரபஞ்சத்தைச் சூனியோபாதானமாகச் சிருட்டிக்கவில்லை; ஆனல் உபாதான சூனியமாகச் சிருட்டித்தார் என்று சொற்பிரயோகவாதம் புரிவாராயினர். இந்தச் சொற்பிரயோகத்துக்கும் 'பிரபஞ்சவிசாரத்'' திற்றானே தக்கவிடை அமைந்திருத்தலை அவர் சிந்தித்திலர். அவ்விடையை நாம் இங்கே எடுத்துக்காட்டுதும்:-

"முதற்காரணமின்றி (கடவுள்) உலகத்தைச் சிருட்டித்தார் என்பதற்கும், (அவர்) இன்மையை உண்மை ஆக்கினர் என்பதற்கும் சொல்லளவின்றிப் பொருளளவிற் சிறிதேனும்பேதமில்லை. கடவுள் இன்மையி லிருந்து உண்மையைத் தோற்றுவித்தாரல்லர் என்பதை நாட்டுதல் கூடுமாயின், அவர்உலகசிருட்டிப்பொருட்டு எடுத்துக்கொண்ட முதற்காரணத்தை இது என்று எடுத்துக் காட்டுதல்வேண்டும். இது கூடாதாயின், அவர் இன்மையை உண்மை ஆக்கினர் என்றபடியேயாகி, அவர்பால் சத்தியபங்கத்தைத் தடையின்றிச் சுமத்திவிடும் என்க."—157-ம் பக்கம்.

காரணகாரிய சம்பந்தம்.

காரணமின்றிக் காரியமில்லை. உலகம் காரியமாதலின் அதனுக்கோர் காரணம்வேண்டப்படும். காரணங்களுள் முதற்காரணமே முக்கியமானதாதலால் அந்த முக்கிய காரணமின்றிக் கடவுள் பிரபஞ்சமாகிய காரியத்தை ஆக்கினு ரென்பது பூவின்றி மாலையாத்தமைபோலாம் என்பது ஆசிரியர் கூற்று.

முதற்காரணம் வேண்டப்படுவது சிற்றறிவும் சிறுதொழிலும் உடையோருக்கு; முற்றறிவுமுற்றுத் தொழிலுமுடைய கடவுளுக்கு அது வேண்டப்படாதென்பது பிரகாசர சமாதானம். இந்தச் சமாதானந்தானும் "பிரபஞ்சவிசாரத்"திலே அனுவதித்துக் கண்டிக்கப்பட்டுளது. அதனையும் இங்கே காட்டுதும்:—

"கடவுள் எல்லாம் வல்லவர் என்பதனால், இல்லாமையினும் வல்லார் எனப்பட மாட்டார்."—154-ம் பக்கம். "காரணத்தான் அமைவதே காரியம். காரணமில்லது காரியமாக மாட்டாது. ஆதலின் காரணத்தை யின்றிக் காரியத்தை ஆக்குவது கடவுளானும் கூடாது"—156-ம் பக்கம்.

கடவுள் காரணமின்றிக் காரியத்தைஆக்கமாட்டார் என்றால் அவர் குறைவுடையராய் விடுவர் என்று பிரகாசர் கூறுகின்றார். இக்கூற்றும் பிரபஞ்சவிசாரத்திற் கண்டிக்கப்பட் டிருத்தலைக் கண்டும் காணாதார்போலக் காட்டுகின்றார். அதனையும் இங்கே தருதும்:—

"கடவுள் சர்வசாமர்த்தியர் என்பது சத்தியம். சர்வசாமர்த்தியம் உடைமையால், அவர் இல்லதை உள்ளதாக்குவர் என்பது பெறப்படமாட்டாது. கடவுளுடைய சர்வசாமர்த்தியம் பொருள்களின் சொரூபமாயவை நோக்க இயலுந் தகுதியுடைய செயல்களிற் செல்லுமன்றி இயலுந் தகுதியில்லாத செயல்களிற் செல்லுமென்பது சிறிதுங் கூடாது. .... கடவுளிடத்தே இயலுந் தகுதியில்லாத அசம்பாவிதம் இன்மையால், அவருடைய சர்வசாமர்த்தியம் இழுக்குற்றிடாது. இயலுந் தகுதியில்லாதது அசம்பாவிதமாய், ஆகவே ஒருசெயலன்றாய், ஆகவே சூனியமாகும். இந்தச் சூனியம் இல்பொருளாதலின், இது 'எல்லாம்' என்னும் சொற்பொருளுக்கு இலக்கியமானவற்றுள் வைத்தெண்ணப்படமாட்டாது."—152-ம் 153-ம் பக்கங்கள்.

காரணமின்றிக் காரியமில்லை என்பது மனித செயலுக்கு மாத்திரமே உரியதொரு ஏகதேச உண்மையன்று. அது காரண காரியங்களின் அமைதிபற்றித் துணியப்படுவதோர் வியாபக உண்மை. காரியத்தின் இலக்கணங்களுட் பிரதானமாயது காரணத்தின் உடனிகழ்ச்சி. இவ் வுடனிகழ்ச்சி யில்லையேல் காரியமே சித்திக்க மாட்டாது. இந்த உண்மையைக் கடவுளுடைய சர்வசாமர்த்தியம் பொய்ப்படுத்திவிடமாட்டாது. விடும் எனின் அது மெய்யைப் பொய்யாக்கிய சத்தியவிரோத சாமர்த்தியம் என்று ஒதுக்கப்படும்.

இனிக் காரணமின்றிக் காரியம் அமைவது தான் கடவுளுடைய செயலாமாயின், இப்போது கடவுள் செயலாக உலகத்தில் நிகழும் செயல்கள் எல்லாம் நிஷ்க்காரணமாகவே நிகழக் காணல் வேண்டும். இங்ஙனமின்றி அவை எல்லாம் காரண சம்பந்தமுற்றே நிகழக் காண்டலின் கடவுள் செயலுக்குக் காரணம் வேண்டா என்பது சிறிதும் பொருந்தாதென்க.

முதற்காரணமின்றி மனிதர்தம்மாலும் காரியங்கள் அமைவதுண் டென்றும், சிரித்தல், நினைத்தல், நிகமனஞ் செய்தல் முதலாயின எல்லாம் முதற்காரணமில்லாத காரியங்களாம் என்றும் பிரகாசர் தமது தத்துவஞான நினைப்பை தாமே காட்டிக் கொடுக்கின்றார்.

சிரித்தல், நினைத்தல் முதலிய காரியங்கள் தர்க்கசாத்திரங்களாற் பிரதிபாதிக்கப்படும் பதார்த்தங்கள் ஏழனுள் தொழிலின் பாற்படும் என்பதையும், பிரபஞ்சமாகிய காரியம் திரவியத்தின் பாற்படும் என்பதையும், திரவியத்துக் குரியதொரு இலக்கணத்துக்குத் தொழிலை உவமையாக எடுத்துக் காட்டுதல் தக்கமுறை அறியாதார் செய்யும் குதர்க்கமேயாம் என்பதையும் பிரகாசருக்கு ஞாபகப்படுத்துகின்றேம்.

தொழிலைத்தானும் சூக்குமமுறையாக ஆராய்வாருளரெனின், அதுவும் முதற்காரண சம்பந்த முடைத்தே நிகழும் என்பதை விவேகிகள் இனிது காண்பர். நினைக்கல் முதலிய காரியங்களுக்கு மனத்தின் கிளர்ச்சியாகிய ஆற்றலே (Force) முதற் காரணமாம் என்பதை இவர் நுனித்து நோக்குதலுண்டாயின் காணவல்லுநராவர்.

சுயம்புப் பொருள்.

பிரபஞ்சத்துக்கு முதற் காரணம் ஒன்று உளதாயின் அதுவும் அநாதிப்பொருளாய்க் கடவுளை நிகர்த்துவிடும் என்று இவர்கள் மதத்தவர் ஒரு நியாயப்போலியை எடுத்து வாதிப்பராதலால், இவ்வாதத்தினைப் பிரபஞ்ச விசார நூலாசிரியர் எடுத்து, அநாதிநித்தியமாக ஒரு சடப்பொருள் உண்மைபற்றி அது கடவுளை நிகர்த்து விடமாட்டாது என்றும், சிங்காசனத்திலே அரசனோடு அரசன் கைப்பிரம்பும் இருத்தல் பற்றி அது அரசனை நிகர்த்துவிடமாட்டா தென்றும் விளக்கி இவர்களுடைய நியாயப் போலியை நிராகரித் தொழித்தார்கள்.

இதனைக் கண்ட பிரகாசர் சிங்காசனத்தில் இருப்பன எல்லாம் அரசனாதல் வேண்டும் என்னும் நியதி இல்லை. சுயம்புவாய் உள்ளன எல்லாம் கடவுளாதல் வேண்டுமென்னு நியதி உண்டென்கிறார். இந் நியதி யாண்டையதாமோ? இதனை எடுத்துக் காட்டினாலன்றே இவர் கூற்று நிலைபெறும்?

இவர் "சுயம்பு" என்பதன் பொருளை "சுயாதீனம்" என்பதன் பொருளோடு மயக்கவைத்தலினாற்றானே இங்ஙனம் எல்லாம் இடர்படுவாராயினர். சுயம்புப்பொருளும் சுயாதீனப் பொருளும் தம்முள் மிகப் பேதப்படும் என்பதை இவர் அறிந்திலர் போலும்! கடவுள் ஒருவரே சுயாதீன சுயம்பு மூர்த்தி. அவரை ஒழிந்த அநாதிப்பொருட்களனைத்தும் பராதீன சுயம்புப் பொருட்களாய்க் கடவுளைப் பற்றுக்கோடாக உடையன. பராதீனப் பொருட்களது உண்மையால் கடவுளுடைய சுயாதீனம் பங்கமுற்றிடாது. உண்மையை உற்றுநோக்குமிடத்து பராதீனப் பொருள்கள் இல்லையாயின் கடவுளுடைய சுயாதீனம் நிலைபெறவே மாட்டாது.

பிரகாசருக்கு இந்த மலைவைத் தருவதெல்லாம் அவருடைய உள்ளத்தில் கிளர்வதொரு இருப்புச் சரக்கேயாம். "இருப்பு" ஒன்றே அல்லாமல் பல இருத்தல் கூடாது என்று அவர் ஆரோபித்து, இந்த ஆரோபத்தின்வழி, இருப்பையுடைய பொருள் ஒன்றே அல்லாமல் பலவாதல் கூடாதென்று மயங்குகின்றார். இவர் இந்த "இருப்பை" உடைய பொருள்கள் இப்போதும் பிரத்தியட்சமாகப் பலஇருத்தலைச் சற்றாவது சிந்தித்திலர். இதுகிடக்க: இருப்பு என்பதற்குப் பொருள் "உளதாதல்" என்னும் ஒன்றே யாதலால், அந்தப் பொருளுக்கு இலக்கியமாகிய பதார்த்தமும் ஒன்றே என்பது எந்தத் தருக்கமுறை கொண்டு தர்க்கிக்கத்தக்கதாமோ? "மனிதன்" என்பதன் பொருள் "மானுட இலக்கண முடையோன்" என்பதொன்றுமாத்திரமே யாதலால, உலகத்திலே ஒரு மனிதன் மாத்திரம் உள்ளன் என்று பிரகாசர் வாதிக்கமாட்டுவரா? பிரத்தியட்சமாகக் காணக் கிடக்கும் உண்மைகளை மறுத்துவிட எண்ணி அபிப்பிராயங் கொண்டு நூதனார்த்தம் படைப்பார் கதி எல்லாம் இவையே யாகும் என்பதற்கு இஃதோர் தக்க சான்றாகும்.

கடவுள் சர்வதாரகர் ஆதலால் அவரைத் தாரகமாகக் கொண்ட அநாதிநித்தப் பொருள்கள் பல உளவாதல் வேண்டும் என்பதையும், அந்தப் பொருள்களின் பொருட்டே அவருடைய கிருத்தியம் அனைத்தும் நிகழும் என்பதையும், அந்தக் கிருத்தியப் பொருட்டு வேண்டப்படும் பதார்த்தங்களும் அவருடைய சந்நிதியிலே, அவரைத் தாரகமாகக் கொண்டு அமைந்து விளங்கும் என்பதையும், பிரகாசர் உண்மைநூல்களிற் கற்றுத் தேறுவதுண்டானால், சூனியோபதானசிருட்டியாகிய அசம்பாவிதத்தை நாட்டிவிடுமாறு இங்ஙனம் எல்லாம் இடர்ப்படமாட்டார்.

வண்ணார்பண்ணை,
ஜுன்—6—1919.

இங்ஙனம்,
த. வைத்தியலிங்கபிள்ளை.

பூலோகத்தின் விசிட்டம்.

மேலே சுவர்க்கம் கீழே பாதலம் நடுவே பூமியாகும். இந்நடுவேயுள்ள பூமியிலே, மானுடராகப்பிறந்து, புண்ணிய பாவங்களைச் செய்யுங்காலத்தில புண்ணிய மதிகப்படுமானால், மேலுள்ள சுவர்க்கத்திலே தேவராகப் பிறப்பார்கள். பாவமதிகப் படுமானால் கீழுள்ள பாதாளத்திலே, நரகராகப் பிறப்பார்கள். மேலே உயருதலுக்கும் கீழே தாழுதலுக்கும் ஆதாரமாகிய இடம் பூமியாகும். கருவி மானுடப்பிறவியாகும். இப்பூமியிலும் சிவசாதனங்கள் நடைபெறாத மிலேச்ச கண்டங்களைவிட்டு அவை நடைபெறுகின்ற இப்பரதகண்டத்திலே பிறப்பது சிறப்பதும் பெரிய நன்மையாகும்.

இதனாலன்றோ நிகண்டு நூலாரும் தெய்வப்பெயர்த்தொகுதியை முன்னும், மக்கட் பெயர்த்தொகுதியை நடுவிலும், விலங்கின் பெயர்த்தொகுதியை இறுதியிலும் முறையறிந்து வைத்தனர். இராவணன் மூன்றுலகத்திலும் தனது ஆணை செல்லும்படி வரபலம் பெற்றிருந்தும நடுவேயுள்ள பூமியிலே குடியேறினன். சூரபன்மன் ஆயிரத்தெட்டு அண்டத்திலும் தனதாணை செல்லும்படி வரபலம் பெற்றிருந்தும நடுவேயுள்ள பூமியிலே குடியேறினன். ஐயையோ! இப்பாதகண்டத்திலே பிறந்த மானுடர் சிவபெருமானைப் பூசித்துப் பாசநீங்கிப்பெற்றுய்வதற்கு முயலுகின்றார்களுமில்லை நினைக்கின்றார்களுமில்லையே. கையிலே பிரகாசமான விளக்கைப் பிடித்துக்கொண்டு பாழ்ங்கிணற்றுள்விழுகின்றவரைப்போலப் பெறுதற்கரிய மானுடப்பிறவியிலிருந்தும் பாவப் படுகுழியிலே விழுகின்றார்களே.

வித்துவான் மு. ஆறுமுகம்பிள்ளை,
வட்டுநகர்.

பிரபஞ்சவிசாரம்.

பிரபஞ்சஉற்பத்தியைக்குறித்து
உலோகாயதம், சாங்கியம், மீமாஞ்சம்,
பௌத்தம், மாயாவாதம்
முதலிய பூர்வக் கொள்கைகளையும்;
பௌதிகவாதம், பிரயோசனவாதம்,
சந்தேகவாதம், பரமாணுவாதம்,
பரிணமவாதம், கிறீஸ்தவவாதம்
முதலிய நவீனக்கொள்கைகளையும்
தர்க்கமுறையாக ஆராய்ந்துகண்டித்து
சைவசித்தாந்த உண்மையைநாடி
யாழ்ப்பாணம்
ச. சபாரத்தினமுதலியாரால்
செய்யப்பட்டதோர் சிறந்த நூல்
உஎ0 பக்கங்கொண்டது
விலை ரூபா. க. சதம். ருO

வேண்டுவோர் நூலாசிரியரிடத்தும் சென்னபட்டினம் மயிலாப்பூர் ம. ரா. ரா. ஸ்ரீ சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களிடத்தும் பெற்றுக்கொள்க.

விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்கவிருக்கின்றன. இன்னும் அவரவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித் தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு. நாகலிங்கம்பிள்ளை
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

புத்தக விளம்பரம்.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால் பிரசுரஞ்செய்யப்பெற்றன.

	ச.
முதற் பாலபாடம் [சித்திரசகிதமானது]	கO
இரண்டாம் பாலபாடம்	கரு
மூன்றாம் பாலபாடம்	உO
நான்காம் பாலபாடம்	ஙO
ஐந்தாம் பாலபாடம்	சO
ஆறாம் பாலபாடம்	௬O
கலாமஞ்சரி (இது எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல்லீவிங் சேர்ட்டிவிக்கற்" வகுப்பிலும் பயிலும் மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும் வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது)	௬O
ஆத்திசூடி கொன்றைவேந்தன், உரையுடன்	ரு
நமசிவாயமாலை, உரையுடன்	ச
வெற்றிவேற்கையுரை	ச
வாக்குண்டாமுரை	ச
நல்வழியுரை	அ
நன்னெறியுரை	அ
இனியவைநாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)	கஉ
இலக்கண வினாவிடை...	கO
நிகண்டு கக-வதும் கஉ-வதும்	உரு
திருவாதவூரடிகள்புராண மூலம்	உரு
திருட்டினன்றூது மூலமுமுரையும்	௬O
திருச்செந்தூர்ப்புராணவுரை (கிளேஸ்காகிதம்) ரூ. க-உரு, (தங்காகிதம்)	க-00
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் ...	கO
கந்தசஷ்டி கவசம்	ரு
சுப்பிரமணியசுவாமி விருத்தம்	ரு
ஆறுமுகசுவாமி விருத்தம	ரு
திருமலைப் பேரின்பக்காதல்	கO
பிள்ளையார்கதை	கஉ
பிரபஞ்சப் பெருவழக்கு	கO
இந்துசமயி தாவரஜீவியாயிருக்கவேண்? ...	கO
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) ...	அ
குமணசரித்திரம் ,, ...	ச
பஞ்சரத்தினத் திருப்புகழ்	அ
சோமவாரவிரதமான்மியம்	கO

☞ இவைகள் இந்து சாதன ஆபீசிற் பெறற்பாலன. ஒரே இனத்திற் பத்துப் புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் கழிவு கொடுக்கப்படும். தொகையாக வாங்குபவர்கட்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும். சபையாரது பாலபாடங்களையெல்லா வகுப்புகளிலும் [illegible]க்குஞ் சைவவித்தியாசாலைகட்கு இந்துசாதனப் பத்திரிகை கிரயமின்றிக் கொடுக்கப்படும்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

விளம்பரம்.

கொழும்பு தமிழ் ஹோம்.
(1910-ம் ஆண்டு தொடக்கம் நடைபெறுவது.)
பிரயாணிகள் வேண்டிய வசதிகளுடன் தங்குமிடம்.
கப்பல் டிக்கட் எடுத்துக்கொடுக்கப்படும்.
95. Dam Street, Colombo.

விளம்பரம்.

கவனியுங்கள்.

நயம் திணுசுகள்-சொற்பலாபம்-விலைசகாயம்.

பேர்பெற்ற கெட்டிச்சாய நூல்கம்பேனி எது?

மதுரை
மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியின் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலைகாரர்களால் அலிஜரைன் என்ற பீபாசாயத்தில் உற்பத்தியாகிற நாட்டுச்சிகப்பு, கெட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24 ம் நம்பர் வரை, 1-ந் தரம் 2-ந் தரம் சாயங்களில் சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்த்து 10 இருத்தல் கட்டுகளும் ஷை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பெண்ணிகறுப்பு மாதிரி கெட்டி கறுப்பு சாயத்தில் 10-ம நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 ருத்தல கட்டுகளும் ஷை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

ஷை நூல்களின் விலை சகாயமாயும் இளைப்புக்கு சிதரில்லாமலும நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. ஷை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினுங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர் கவரிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer.
Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. INDIA.

சிரணி நாகபூஷணியம்மைகோயில் திருப்பணி விஞ்ஞாபனம்.

இக்கோயிற் திருப்பணிக்காகச் சிங்கப்பூர் முதலிய தொடுவாயிராச்சியப் பகுதியில் பொருள் சேகரிக்குமாறு யானும் எம்மூர்ப்பலபிரபுக்களுமாகச் சேர்ந்து சண்டிருப்பாய் ஸ்ரீ. இராமு உடையார் பௌத்திரனும், மானிப்பாய் மேற்கிலுள்ள கட்டுடை என்னுங் கிராமத்து ஸ்ரீ. சிதம்பரப்பிள்ளையவர்கள் புத்திரனும், மேற்படி ஆலயத்தில திருமஞ்சனக் கிணறு, வாகனம், மடாலயம் முதலிய திருப்பணிகள் செய்வித்தவரும், புதிதாயமைக்க வெண்ணியிருக்கும் திருப்பணியின் பொருட்டு வெண்ணவரைக் கற்கள் உபகரித்தவரும், தொடுவாய்ப் பகுதியில் றெயில்வே இன்ஸ்பெக்டரும், சத்தியம், சாந்தம், பொறை, ஈகை, ஜீவகாருண்ணியம், பெரியோர் குரு ஈசுரவழிபாடு ஆகிய நற்குணம் வாய்ந்த சற்குண சம்பன்னருமான ஸ்ரீமாந். நாகேந்திரம்பிள்ளையவர்களை நியமனஞ் செய்திருக்கின்றோம். ஆகையால் தொடுவாயிராச்சியப்பகுதியிலுள்ள சைவசமய சீலர்கள் யாவரும் மேற்படி பிள்ளையவர்களிடம் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
ச. வைத்தியலிங்கம்,
சிரணி நாகபூஷணியம்மை கோயில் மானேசர்.

ஆ. மாணிக்கப்பிள்ளை, மானிப்பாய் சண்டிருப்பாய் உடையார்.
வ. தில்லையம்பலம், சமம்.
ந. சோமசுந்தரம், ,,
ச. அம்பலவாணர், சுதேச வைத்தியன்.
சி. கந்தர், சமம்.
க. வைத்தியலிங்கம், Retired Sub-Inspector, Agricultural Department F. M. S.

நகைகள்.

தற்கால நாகரிகத்திற்கேற்ற சகலவிதமான நகைகளும் நம்மிடத்திற் பெறற்பாலன. திறமான கம்மிய விற்பன்னராற் செய்யப்பட்டுள்ளன. இன்னும் வேண்டியமாதிரியாகச் செய்து கொடுக்கப்படும். எவ்விதமான ஆடர்களும் மிகவும் கவனிக்கப்படும். திறப்பிடாத்திற்கு நாம் பொறுப்பாளிகளாக நிற்கின்றோம். விருப்பமானவர்கள் எங்களிருவரில் ஆருக்காயினும் தெரிவிக்கவும்.

J. H இராசையாவின் மனைவி
அல்லது, E. இராமலிங்கம்,
43-ஹில்ஸ்ரீட், கொழும்பு.

இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்தலேகியம்.

இது அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ. உ, அணா அ.

3. பிரமேக வியாதிக்குச் சந்தனச்செந்தூரம்.

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.

சரீரத்தின் எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தே கண்கண்டபலம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.

கச மாத்திரை புட்டி ஒன்று ரூ. க, அணா அ.

5. மேகசஞ்சீவிச் சூரணம்.

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ. உ.

6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.

அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

சக நாள் மருந்தின் கிரயம் ரூ. க, அணா அ.

7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும். உஉ நாள் மருந்து ரூ. உ.

8. மூலிகை ரத்தினத் தைலம்.

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால அன்று முழுவதும் சிறுசிறுப்புடனிருப்பதுமன்றி ஒருவாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ. 1.

9. பரிமள பற்பொடி.

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ. 0-4-0 டஜன் 0 க்கு ரூ. 2-12-0.

10. படர்மேக சங்காரி வெண்ணெய்.

மேகரோயால் திரேகத்தில்விழும் எவ்வித படர்ப் படைகளையும் க வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச, டஜன் க-க்கு ரூ. உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறாதீர்கள்!!!
உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்னவைதாக்கும் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்திலும் தனங்கிடைக்கும், ங. கலியாணம் சொந்தமா, ச. சந்திரபாகம் எத்தனை, ரு. அது முன்னு பின்னு, சா. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனு, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, கூ. சொந்தவீடு கிடைக்குமா, கO. கடன் எப்போது நிவிர்த்தியாகும, கக. வியாபாரம் ஜெயமாகுமா, கஉ. வீணர்த்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ. க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ. ரு.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினால் ஜோதிட, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிடம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.

காசிப் பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு] சகாய விலைகள் [நாணயமான ஜரிகை

பிரியமில்லாததைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுவோம்.

கீழே கண்ட பட்டுத்திணுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—16 முழம் நீளம் 2½ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா விலை ரூபா 20முதல 50 வரை. அதேமாதிரி சேலை உடலினும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபா 20 முதல் 100 வரை.

ரவிக்கை:—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா 2 ரூபா முதல் 8 வரை உடலிலும்; புட்டா ஜரிகை பூவேலைசெய்தது. ரூபா 3-முதல் 20 வரை.

துப்பட்டாக்கள்:—6-முழம் 2½- அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை; உடல் சாதா ரூபா 8 முதல் 25 வரை. அதேமாதிரி உடலில் ஜரிகை வேலைகள் ரூபா 4 முதல் 55 வரை.

சவுக்கங்கள்:—2½ முழம் நீளம் 2½ அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா 6-8-0 முதல் 15 வரை. அதேமாதிரி உடலில் பூக்கள் போட்டது. ரூபா 9 முதல் 30-வரை.

வெள்பட்டு வேஷ்டிகள்:—6, 7, 8, 9-முழம் நீளம் 2½, 2¾, 3-முழம் அகலம். சுத்த வெள்ளை பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்ன கம்பி போட்டது. விலை ரூபா 8½ முதல் 20-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்ன கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பி போட்டது. ரூபா 12-முதல் 30-வரை.

ஷை சவுக்கங்கள் 2½×2½-முதல் சிகப்புக் கம்பிக் கரை போட்டது. ரூபா 5-முதல் 8-வரை. ஜரிகைக்கம்பி போட்டது ரூபா 9-முதல் 15 வரை. ஷை வெள்பட்டு வேஷ்டிகள் ருத்திராட்சக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

சுத்தமான கம்பளி போர்வைகள்:—6-முழம் நீளம் 3-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா 5-8 முதல் 8-வரை

உருத்திராட்சங்கள்:—6 முகம் 33 உள்ள மாலை அணா 8 முதல் ரூபா 5 வரை; 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16-முகம் தனி மணிகள் ரூபா 5 முதல் ரூபா 25 வரை; 108-கொண்ட ஜெபமாலை அணா ஆறு முதல் ரூபா 5 வரை.

வயிரவர் காசிக் கயிறு:—1-ம் கெ. 100-க்கு ரூபா 3. 2-ம் கெ. ரூபா 2-8-0, 3-ம் கெ. ரூபா 2. ஷை சிறிது 6-அணா. அதிலும் சிறிது 4-அணா.

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு:—பித்தளை, வெண்கலத்தால் செம்பு, குடம், கரண்டி முதலிய 27-சாமான்கள் அடங்கியது. சிறிது ரூபா 2. பெரிது ரூபா 4. சுயம் கஸ்தூரி:—தோலா -க்கு ரூபா 35

Silk Pitamber Co., Benares City.
விலாசம்:—மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.